திருவள்ளூர் மாவட்டத்தில் - மிட்சுபிஷி எலக்ட்ரிக் நிறுவனம் சார்பில்

ரூ.1891 கோடி முதலீட்டில் குளிர்சாதன இயந்திர உற்பத்தி ஆலை! 2000 பேருக்கு வேலைவாய்ப்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, மே. 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ரூ.1891 கோடி முதலீட்டில், 2000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் காற்றழுத்தக் கருவிகள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில் நிறுவப்படவுள்ள ஆலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (9.05.2023) சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் மற்றும் சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த மிட்சுபிஷி எலக்ட்ரிக் ஏசியா பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் துணை நிறுவனமான மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 1891 கோடி ரூபாய் முதலீட்டில் அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) உற்பத்தி ஆலை அமைப்பதற்கு கட்டமைக்கப்பட்ட ஊக்கச் சலுகைகள் (Structured Package of Assistance) வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு அரசு மற்றும் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் இடையே மேற் கொள்ளப்பட்டது. இதன்மூலம் இந்நிறுவனத்தில் 2000க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும்.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தாலுகா, பெருவயல் கிராமத்தில், மகேந்திரா ஆரிஜின்ஸ்ல், 52 ஏக்கர் நிலப்பரப்பில் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவன ஆலை அமைப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த திட்டத்தின் முதலீடான 1,891 கோடி ரூபாயும் நூறு சதவிகித அந்நிய நேரடி முதலீடு மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தமிழ்நாடு, பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில், இந்தியாவிலேயே முதன்மை மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. பன்நோக்கு திட்டங்களை பெரும அளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கவும், மாநில பொருளாதாரத்தை வலுவடைய செய்திடவும், தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கினை அடைந்திட பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுநாள் வரை 4,10,561 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.2,73,448 கோடி மதிப்பிலான 224 முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (9.05.2023) சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 1891 கோடி ரூபாய் முதலீட்டில் 2000–க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் **(Room Air Conditioners)** மற்றும் காற்றழுத்தக் கருவிகள் **(Compressors)** உற்பத்தி ஆலை அமைப்பதற்கு கட்டமைக்கப்பட்ட ஊக்கச் சலுகைகள் **(Structured Package of Assistance)** வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு அரசு மற்றும் மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் இடையே மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே. விஷ்ணு, மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் குழுமத் தலைவர் யாசுமிச்சி தாசுனோகி, மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிர்வாக இயக்குநர் கசுஹிகோ தமுரா, சென்னையில் உள்ள ஜப்பான் துணைத் தூதர் டாகா மசாயுகி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட்

மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஆற்றல் மற்றும் மின்சார அமைப்புகள், தொழில் துறை ஆட்டோமேஷன், தகவல் மற்றும் தொடர்பு அமைப்புகள், வீட்டு உபயோகப் பொருட்கள், மின்சார மற்றும் மின்னணு உபகரணங்களை தயாரிப்பதில் இணையற்ற நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள, உலகளாவிய முன்னணி நிறுவனமான மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.

தமிழ்நாட்டில் அமையவுள்ள Mitsubishi Electricன் தொழிற்சாலை, இந்தியாவில் அதன் முதலாவது அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் (Room Air Conditioners) தயாரிப்பு நிறுவனமாகவும், உலகளவில் குளிர்சாதன இயந்திரங்கள் உற்பத்தியில் ஜப்பான், தாய்லாந்து, சீனா, இங்கிலாந்து, துருக்கி, மெக்சிகோ ஆகிய ஆறு நாடுகளுக்கு அடுத்து, ஏழாவது நாடாகவும் இருக்கும்.

மிட்சுபிஷி எலெக்ட்ரிக் நிறுவனம், ஜப்பானைத் தவிர, வெளிப்புற அலகுகள், உட்புற அலகுகள் மற்றும் காற்றழுத்தக் கருவிகள் (Compressors) ஒரே இடத்தில் உற்பத்தி செய்யும் முதலாவது தொழிற்சாலையாகவும் இது இருக்கும். இந்நிறுவனம் வணிகரீதியான உற்பத்தியை அக்டோபர் 2025ல் தொடங்க திட்டமிட்டுள்ளது. இந்த தொழிற்சாலைகளில் சுமார் 60 சதவிகித பெண்களை பணியமர்த்த திட்டமிடப் பட்டுள்ளது.

பிரத்யேகமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வசதியைக் கொண்டிருக்கும் மிட்சுபிஷி எலெக்ட்ரிக் நிறுவனம், புதுமுறை காணல் (Innovation) மற்றும் நான்காம் தலைமுறை தொழில் வளர்ச்சியை (Industry 4.0) மேலும் ஊக்குவிக்கும். மிட்சுபிஷி எலெக்ட்ரிக் நிறுவனத்தின் இந்த முதலீடு, அதிக எண்ணிக்கையிலான துணைத் தொழில்களை மாநிலத்திற்கு கொண்டு வந்து, மாநிலத்தின் மின்னணு தொழில் உற்பத்தியை மேம்படுத்திட உதவும்.

மிட்சுபிஷி எலெக்ட்ரிக் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் காற்றழுத்தக் கருவிகள் பெரும்பாலும் அந்நிறுவனத்தால் தயாரிக்கப்படும் குளிர்சாதன இயந்திரங்களில் பொருத்துவதற்காக பயன்படுத்தப்படும். மேலும், எதிர்வரும் காலங்களில் பிற நிறுவனங்களுக்கு தேவையான காற்றழுத்தக் கருவிகளை உற்பத்தி செய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் காற்றழுத்தக் கருவிகள் இறக்குமதியை குறைப்பதற்கு வாய்ப்பாக அமையும்.

இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே. விஷ்ணு, மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் குழுமத் தலைவர் யாசுமிச்சி தாசுனோகி, மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா நிர்வாக இயக்குநர் கசுஹிகோ தமுரா, சென்னையில் உள்ள ஜப்பான் துணைத் தூதர் டாகா மசாயுகி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள்

தாமிரபரணி - கருமேனி - நம்பியாறு நதிநீர் இணைப்புத் திட்டம் முடிவடையும்!

நெல்லையில் அமைச்சர் துரைமுருகன் பேட்டி!

நெல்லை, மே.10-

நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி ஆறு, நம்பியாறு, கருமேனியாறு நதி நீர் இணைப்பு திட்டம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முழு அளவில் முடிவடைந்து பயன்பாட்டிற்கு வரும் என நெல்லை மாவட்டத்தில் நதி நீர் இணைப்பு திட்ட பணிகளை ஆய்வு செய்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நதி நீர் இணைப்பு திட்ட பணிகளை ஆய்வு செய்தார். முதலாவதாக தாமிரபரணி ஆறு, நம்பியாறு, கருமேனியாறு நதிநீர் இணைப்பு திட்டப் பணிகளில் மூன்றாவது நிலையாக நடந்து வரும் நாங்குநேரி அருகே உள்ள கோவன்குளம் பகுதியை சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு முன்னிலையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன். நேரில் பார்வையிட்டு ஆய்வு பணி மேற்கொண்டார்.

பின்னர் திட்டப் பணிகள் குறித்து நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து நதிநீர் இணைப்பு திட்டத்தின் கடைசி பகுதியான தூத்துக்குடி மாவட்டம் எம்.எல்.தேரி. பகுதியிலும் ஆய்வு செய்தார். அதன் பின்னர் நெல்லை பொன்னாக்குடியில் நான்கு வழி சாலையின் குறுக்கே நதிநீர் இணைப்பு திட்டத்திற்காக கட்டப்பட்டு

வரும் பாலம் பணிகளை பார்வையிட்டார்.

பின்னர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நெல்லை மாவட்டத்தில் நதிநீர் இணைப்பு திட்டப்பணிகள் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை புயல் வேகத்தில் நடந்து வந்தது. 50 சதவீத பணிகள் முடிந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, கடந்த 10 ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டு விட்டது. பொது மக்களின் நலனிற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முன்னெடுத்து திட்டத்தை விரிவு படுத்தி விரைவாக செயல்படுத்த வேண்டும் என அறிவித்தார்கள். மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்த பின்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் 67.075 கிலோமீட்டர் நீளத்திற்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் 8.10 கிலோமீட்டர் நீளத்திற்கு வெள்ளநீர் கால்வாய் அமைக்கப்பட்டு வருகிறது.

தற்போது ஆய்வு செய்ததன் அடிப்படையில் வரும் செப்டம்பர், அக்டோபர் மாதம் மழை காலங்களில் இந்த திட்டத்தின் வாயிலாக தண்ணீர் கொண்டு செல்லலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த திட்டம் செயல்பாட்டிற்கு வரும்போது 17,002 ஹெக்டேர் புதிய பாசன பரப்பு உள்பட 23040 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டை, நாங்குநேரி, இராதாபுரம், ஆகிய சட்டமன்ற தொகுதிகளும் தூத்துக்குடி மாவட்டத்தில் திருவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும்.

இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் நதிநீர் இணைப்பு திட்ட பணிகள் முடிவடைந்து முழு பயன்பாட்டிற்கு வரும்.

இந்த திட்டத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கு கடந்த ஆட்சியில் முறையாக பணம் வழங்கவில்லை. தற்போது இடம் கொடுத்தவர்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டு பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. நிதி ஆதாரத்தை பொறுத்து அணைகள் தூர் வாரப்படும். கடனாநதி, இராமநதி, இணைப்பு திட்டம் ஜம்புநதி மேல் மட்ட கால்வாய் திட்டம் குறித்து அடுத்த மாதம் தென்காசி மாவட்டம் செல்கிறேன். அங்கு ஆய்வு செய்து திட்டங்கள் குறித்து முடிவு எடுக்கப்படும். நிதி ஆதாரங்களை பொறுத்து அணைகள் தூர் வாரும் பணி நடத்தப்படும். பிற மாநிலங்களுக்கு கனிம வளங்கள் கொண்டு செல்ல அனுமதி உள்ளது. முறையாக அனுமதிகளை பெற்றுத்தான் கொண்டு செல்கிறார்கள். கனிம வளங்களை எடுத்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்ட வாகனங்களை தவிர்த்து ராட்சத கனரக வாகனங்களில் கனிம வளங்கள் கடத்தப்பட்டால் வாகனங்களை பறிமுதல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், ஒன்றியச் செயலாளர்கள் ராஜன், ஜோசப்பெல்சி, ஆரோக்கிய எட்வின் மற்றும் தலைமை பொறியாளர் ஞானசேகர், கண்காணிப்பு பொறியாளர் செல்வராஜ், செயற் பொறியாளர் மாரியப்பன் உள்பட அரசு அலுவர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் இடையன்குடியில் தமிழறிஞர் ராபர்ட் கால்டுவெல் நினைவு இல்லத்திற்குச் சென்று அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அங்குள்ள அருங்காட்சியகத்தையும் பார்வையிட்டார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வை. மகாவிஷ்ணு
மே 10 (2007)

தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகரத்தில் தொடர்ந்து முப்பதாண்டுகள் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1987 இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், 1991 ரயில் மறியல் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.